Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 069 | திங்கள் Monday | 08.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஆன்லைன் பத்திரப் பதிவு அரசின் புதிய நடைமுறை அறிவிப்பு



சென்னை: பதிவுத்துறையில் இணையவழியில் "வருகை இல்லா ஆவணப்பதிவு" (Anywhere Registration) கட்டாயமாக்கல் தொடர்பான அறிவிப்பு தமிழக பத்திர பதிவுத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பத்திர பதிவுத்துறைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆவணப்பதிவு நடைமுறைகளை எளிமைப்படுத்த பொதுமக்கள் தாங்களே நேரடியாக இணையவழியே ஆவணப்பதிவு செய்வதற்கான முறையை பதிவுத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.இந்தஆவணப்பதிவு முறை மூலம் பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல் எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் (24X7X365) இணையதளத்தின் மூலம் இணையவழி தங்களது ஆவணங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

ஆவணப் பதிவிற்கு சார்பதிவாளர் ஒப்புதல் அளித்ததும், சார்பதிவாளரின் மின்னணு கையொப்பத்துடன் ஆவணமானது சம்பந்தப்பட்ட நபரின் உள்நுழைவிற்கும் அலைபேசிக்கு புலனம் (Whatsapp) மூலமும் அனுப்பி வைக்கப்படும். அந்த ஆவணத்தை ஆவணதாரர்கள் தங்கள் உள்நுழைவுவழியேதரவிறக்கம் செய்து கொள்ளலாம். "வருகை இல்லா ஆவணப்பதிவு (Anywhere Registration)" நடைமுறை விரைவில் கட்டாயமாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

சார்பதிவாளர் அலுவலகம் வராமலேயே பதிவு செய்யக்கூடிய ஆவணங்கள்: முதல் விற்பனை மனை (First sale of Plot)

முதல் விற்பனை அடுக்குமாடி குடியிருப்பு(First sale of Flat)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விற்பனை ஆவணங்கள்

வங்கிகளில் பெறும் கடனுக்கான அடமானம் மற்றும் ரசீது ஆவணங்கள்

பொதுமக்கள், கட்டுமான நிறுவனங்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வங்கிகள், வழக்கறிஞர்கள்

பதிவுத்துறை இணையதளத்தில் தங்களது உள்நுழைவினை தாங்களே உருவாக்கிமேற்படி ஆவணங்களை(ரசீது) இணையவழியில் சமர்ப்பிக்கலாம்.

ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்கள், எழுதிப் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகிய அனைவருக்கும் ஆதார் அட்டை மேலேற்றம் செய்யவேண்டும்

ஆதார் ஆணையத்தின் மூலம் கைரேகை அல்லது கருவிழி படலம் வழி ஆதார் சரிபார்க்கப்பட வேண்டும்.

தொழில்நுட்ப தேவைகள் இணைய இணைப்பு

UIDAI அங்கீகரிக்கப்பட்ட எல்1 விரல் ரேகை இயந்திரம் மற்றும் கருவிழிப்படலம் கவரும் கருவி

புகைப்படக் கருவி (Webcam)

சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

வன்பொருள்(Hardware): முகமது யூனுஸ், அருண்குமார் 7397574067 9940446694

மென்பொருள்(Software): சீனிவாஸ் கணேஸ், டில்லி பாபு 6369798973 8525805957

# " த.வெ.க. ஆட்சி மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இருக்கிறது..." தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பேச்சு



சென்னை: மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற, செய்யூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பனையூர்பாபுதலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.அப்போது திமுக தலைவர் ஸ்டாலின் உரையாற்றும் போது, " திமுகவைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான் வேலை அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் உழைப்பதற்குத் தயாராக நாங்கள் இருக்கிறோம், "நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம்" என்று நமக்கு இன்றைக்குத் துணையாக வந்து சேர்ந்திருக்கும் பாபுவை வரவேற்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒரு ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்பதெல்லாம் நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் நான் சொன்னேன், "ஆறு மாதங்களுக்கு இதைப்பற்றி நான் பேசப் போவதில்லை" என்று. ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்பே பேச வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ என்ற அச்சம்தான் இருந்து கொண்டிருக்கிறது; வந்துவிட்டது.

அதைப் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள், இந்த விமர்சனங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. ஆறு மாதம் அல்ல, ஐந்து மாதம் அல்ல, நான்கு மாதம் அல்ல... மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.இந்தநிலையில்தான் இன்றைக்கு நீங்களும் வந்து இந்த இயக்கத்தில் உங்களை இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, கழகம் ஈடுபடும் எந்தப்பணிகளாகஇருந்தாலும், அந்தப் பணிகளுக்கு நீங்களும் ஒத்துழைப்பு தருவதற்காக வந்திருக்கிறீர்கள் " என்று அவர் பேசினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முதன்மை செயலாளராக இருந்தவர் பனையூர் பாபு. கடந்த 2021 தேர்தலில் செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாக இருந்தார். 2026 தேர்தலில் வாய்ப்பு அளிக்கவில்லை. இதற்கிடையே விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து விலகுவதாக அவர் கடந்த மாதம் 24-ம் தேதி அறிவித்திருந்தார்.

ஒரு நடிகரை விமர்சித்துவிட்டு, அதே பிள்ளையை தத்தெடுப்பது போல் நிலைப்பாடு எடுப்பது அவர் இதுவரை சமரசமின்றி கட்டிக்காத்த கொள்கைகளிலும், கருத்தியலிலும் தடம் மாறத் தயாராகிவிட்டார் என்பதையே அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. ஆட்சி அதிகாரங்கள்வரும்,போகும். அது நிலையற்றது.

கொண்ட கொள்கையிலும், எடுக்கும் நிலைப்பாட்டிலும் உறுதியாக இல்லாமல், அடிக்கடி நிலைப்பாடுகளை மாற்றி, குழப்பத்திலும், அவநம்பிக்கையிலும் செயல்படும் ஒரு தலைமையின் கீழ் இனியும் என்னால் பயணிக்க இயலாது. எனவே, விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் முழுமையாக விலகுகிறேன்" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பனையூர் பாபு தி.மு.க.வில் தன்னை இணைத்துக் கொண்டார். மேலும் மாற்றுக்கட்சியில் இருந்து விலகி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திமுகவில் ஐக்கியம் ஆகினர்.

# "சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை இந்தியாவில் குறைவுதான்" மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி: வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.29 என உயர்ந்துள்ள நிலையில், உலக அளவில் ஒப்பிட்டால் இந்தியாவில் அதன் விலை குறைவே என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.



மேற்காசிய போர் காரணமாக உலக நாடுகளுக்கு தேவையான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பெட்ரோல், டீசல், எல்பிஜி எரிவாயு உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்துள்ளது. இவை நேரடி தாக்கம் என்றால் பல்வேறு பொருட்களின் விலை உயர்வினால் உலக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சூழலில் இந்தியாவில் சிலிண்டர் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.இந்த புதிய விலையேற்றம் இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதனை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அதன்படி வீட்டு உபயோகத்துக்கான 14.2 கிலோ எடையுள்ள மானியம் இல்லாத சிலிண்டரின் விலை சிலிண்டருக்கு ரூ.29 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ரூ.928.50-க்கு விற்பனை செய்யப்பட்ட வீட்டு உபயோக சிலிண்டரின் விலை இன்று முதல் ரூ.957.50-க்கு விற்பனை செய்யப்படும். கடைசியாக கடந்த மார்ச் மாதம் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.60 என உயர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது. வர்த்தக சிலிண்டரின் விலை ரூ.46 உயர்ந்துள்ளது. சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக சிலிண்டர் ரூ.3,283 என தற்போது விற்பனை ஆகிறது.

இந்த விலையேற்றம் சாமானிய மக்களை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. இந்நிலையில், இது தொடர்பாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் விளக்கம் தந்துள்ளது. அதில் கூறியுள்ளதாவது: மேற்காசிய போர் சூழல் காரணமாக சர்வதேச அளவில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. அதன் விளைவாக வீட்டு உபயோக சமையல் எரிவாயு (எல்பிஜி) சிலிண்டரை விநியோகிப்பதற்கான செலவு ரூ.1,600-க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இது இறக்குமதி விலைஉடன்தொடர்பு கொண்டது.

விலை உயர்ந்துள்ள சூழலிலும் அண்டை நாடுகளான பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், நேபாளம் உள்ளிட்ட நாடுகளை காட்டிலும், பொருளாதார ரீதியாக முன்னிலையில் உள்ள அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளை காட்டிலும் இந்தியாவில்தான் வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டரின் விலை குறைவாக உள்ளது. போர் சூழலிலும் எல்பிஜி சிலிண்டர் உள்ளிட்ட எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு இல்லாத வகையில் இந்தியா சூழலை கையாண்டு வருகிறது.

மேலும், வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டரை மானிய விலையில் மக்கள் பெற்று வருகின்றனர் என்பதையும் மத்திய அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# அரசின் விலையில்லா புத்தகங்கள், நோட்டுகள் மாணவர்களுக்கு வழங்கல்
## தேவகோட்டையில் பெற்றோர்-ஆசிரியர் பங்கேற்புடன் சிறப்பு விழா

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் அமைந்துள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், புதிய கல்வியாண்டை முன்னிட்டு அனைத்து மாணவர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

விழாவில் பெற்றோர்-ஆசிரியர்கழகப்பொறுப்பாளர்களான ரஞ்சிதா, சரவணன், ஜோசப் மற்றும் பொன்மணி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் நோட்டுகளை வழங்கினர். கல்வி வளர்ச்சிக்கு அரசு மேற்கொண்டு வரும் நலத்திட்டங்கள் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் துணைபுரிவதாக அவர்கள் தெரிவித்தனர்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர் மற்றும் ஆசிரியைகள் முத்துலெட்சுமி, பாண்டிச்செல்வி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

புதிய கல்வியாண்டை உற்சாகமாகத் தொடங்கும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.







கைத்தறி, ஜவுளி அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஈரோடு தாலுக்காவில் உள்ள

# காலிங்கராயன் வாய்க்காலில் 123348 மைல் முதல் 154.5195 மைல் வரையிலான புனரமைப்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்

கைத்தறி, ஜவுளி மற்றும்கதர்த்துறைஅமைச்சர் ம.விஜய் பாலாஜி நேற்று (07.06.2026) ஈரோடு தாலுக்காவில் உள்ள காலிங்கராயன் வாய்க்காலில் 12-3-348 மைல் முதல் 15-4.5-195 மைல் வரையிலான புனரமைப்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்

கைத்தறி, ஜவுளி மற்றும் காதித் துறை அமைச்சர் பேசும் போது தெரிவித்தாதவது,

காலிங்கராயன் அணைக்கட்டு பவானி ஆற்றின் குறுக்கே,காவிரி ஆறும், பவானி ஆறும் சங்கமம் ஆகும் இடத்திற்கு சற்று மேற்பகுதியில் பவானி என்னும் ஊருக்கு அருகில் காலிங்கராயன் என்பவரால் சுமார் 740 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான பாலம். இப்பாலமானது, காலிங்காரயன் அணைகட்டிலிருந்து காலிங்கராயன் வாய்க்கால் வலது புறமாக பிரிந்து 56 மைல் 5 % பர்லாங் 20 அடி நீளம் செல்கிறது. காலிங்கராயன் வாய்க்கால் மூலம் ஈரோடு, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களில் சுமார் 15743 ஏக்கர் பாசன நிலங்கள் இதன் மூலம் பயன்பெறுகின்றன.

காலிங்கராயன் கால்வாயில் தொழிற்சாலை கழிவுநீர் நேரடியாகக் கலப்பதைத் தடுக்கக் கோரி, விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு அரசு காளிங்கராயன் கால்வாயைப் புனரமைக்க நிர்வாக அனுமதி அளித்துபணிகள் முடிக்கப்பட்டன.

இப்புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்ட போதிலும், மாசுப் பிரச்சினை இன்னும் முழுமையாகத் தீர்வு பெறவில்லை, இதற்கு முக்கியக் காரணம், ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் மைல் 12-3-348 முதல் 15-4-395 வரை செல்லும் காலிங்கராயன் கால்வாயின் ஒரு பகுதி புனரமைக்கப்படாமல் இருப்பதே ஆகும்.

தற்போது வாய்க்காலில் இருபுறமும் பக்கச் சுவர் அமைக்கும் பணி, கால்வாய் படுகையில் கான்கிரீட்தளம்அமைத்தல்(Lining),ஆய்வுப்பாதை அமைத்தல், கழிவுநீர் கால்வாய் (Sewage carrier) அமைத்தல், மதகுகள் மறுகட்டுமானம்செய்தல், மழைநீர் வடிகால் கட்டுமானம் அமைத்தல், தொட்டிபாலம் மறுகட்டுமானம் செய்தல்,கால்வாய் வெளியேற்றிகள் புனரமைத்தல் (Channel Outlets), பாலங்கள்மறுகட்டுமானம் செய்தல், கான்கிரீட் சரிவுப் பாதைகள் அமைத்தல் (Ramps). சி-வகை குடியிருப்புகள் கட்டுதல். ஆகிய புனரமைப்பு பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றன. இப்பணிகளை விரைந்து முடிந்திட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

மேலும் இந்த புனரமைப்புத் திட்டம் நிறைவடைந்தபிறகு,காலிங்கராயன் கால்வாய் அமைப்பில் நீர் மற்றும் விவசாயத்தின் மீதான மாசுபாட்டின் பாதிப்புகள் குறைக்கப்படும். அதோடு, கால்வாயின் வலிமை மற்றும் உறுதித்தன்மை மேம்படுத்தப்படுவதோடு, புனரமைக்கப்பட்டபகுதிகளில் கால்வாயின் செயல்பாட்டுத் திறனும் அதிகரிக்கும். இதன் விளைவாக,பயிர்விளைச்சலும் கணிசமாக உயரும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா. கஆனந்த் மோகன், நீர்வள ஆதாரத்துறை உதவி செயற்பொறியாளர் ஜெகதீஷ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சிவகிரி தேர்வு நிலை பேரூராட்சியில் உள்ள 12வது வார்டு பாரதி தெரு பகுதியில் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணி நடைபெற்றது.நிகழ்விடத்தை பேரூராட்சி தலைவர் பிரதீபா கோபிநாத் நேரில் சென்று சாலைப் பணிகளின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.ஆய்வின் போது, 12 வது வார்டு கவுன்சிலர் தனபால் உடன் இருந்து பணிகளை பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்டம் ஆப்பக்கூடல் அருகே உள்ள வேம்பத்தி வெள்ளாள பாளையத்தில் உலக சுற்றுச்சூழல் தினமான வேம்பத்தி மனவளக் கலை மன்றத்தில் சார்பில் மரம் நடும் விழா தங்கமணி தலைமையில் நடைபெற்றது. அப்போது வேம்பத்தி ஏரி பகுதியில் பல்வேறு வகையான பொதுமக்களுக்கு பயனுள்ள மரக்கன்றுகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு நட்டு வைத்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை கரட்டூர் பகுதியில் உள்ள நுண் உரம் செயலாக மையத்தில் குப்பைகளை தரம் பிரித்து அதை உரமாக மாற்றுவது குப்பைகளை நான்கு வகையாக பிரித்து வாங்குவது, பிளாஸ்டிக்பொருட்களைகையாளும்விதம், உயிரிஎரிவாயுமையம், கழிவுநீர்ஆகியவற்றைநகர்மன்ற தலைவர் என்.ஆர். நாகராஜ் நகராட்சி ஆணையாளர் மங்கையர்க்கரசன், ஆகியோர் கலந்து கொண்டு விளக்கி கூறினர்

# பெண்ணுக்கு கூட்டு பாலியல் வன்கொடுமை: ஐவருக்கு ஆயுள்; ஒருவருக்கு 20 ஆண்டு சிறை

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டம்,ஐயப்பன் தாங்கல் பகுதியைச்சேர்ந்தவர்திருமணமான, பட்டியலினத்தைச் சேர்ந்த 40 வயது பெண். இவர், கடந்த 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தன் சொந்தஊரானவிழுப்புரம் மாவட்டம்,திண்டிவனம் பகுதியில் நடைபெற்ற கோயில் திருவிழாவுக்கு சென்று விட்டு, காரில் வீடுதிரும்பிக்கொண்டிருந்தார். கார் ஐயப்பன் தாங்கல் அருகே தெள்ளியார் அகரம் பகுதியில் வந்து கொண்டிருந்த போது மதுபோதையில் இருந்த 6 பேர் வழி மறித்து, ஓட்டுநர் இளங்கோவை கீழே தள்ளிவிட்டு அந்த காரை ஓட்டிக் சென்றுள்ளனர்.தொடர்ந்து, அவர்கள், தெள்ளியார் அகரம்-



பாலாஜிநகர்பகுதியில் உள்ள காலி மைதானத்தில் காரை நிறுத்தியுள்ளனர்.

பிறகு6பேரும்,காரில் இருந்த 40 வயது பெண்ணை கூட்டு பாலியல் வன் கொடுமை செய்துள்ளனர். மேலும் நகைகளை பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். கார் ஓட்டுநர் இளங்கோ அளித்த புகாரின் பேரில், எஸ்-ஆர்எம்சி (போரூர்) போலீஸார் கூட்டு பாலியல் மற்றும் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, விசாரணைநடத்தினர். அதன் அடிப்படையில், மதுபோதையில் பெண்ணை கடத்திச் சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து, நகைகளை பறித்து சென்றது தொடர்பாக ஐயப்பன் தாங்கல் சூர்யா என்கிற சூரிய பிரகாஷ் (25), கருப்பையா என்கிற குட்டி (27), சந்தோஷ் என்கிற சந்தோஷ்குமார் (27), சுபாஷ் (23), அய்யப்பாக்கம் தினேஷ் (31), காரப்பாக்கம் கணேஷ் (22) ஆகியோரை கைது செய்து, புழல் சிறையில் அடைத்தனர். திருவள்ளூர் மாவட்ட முதன்மை, அமர்வு நீதிமன் றத்தில் நடைபெற்று வந்தது. இவர்கள் மீதான குற்றங்கள் நிரூபணமாகின.

இதையடுத்து, நீதிபதி ஜூலியட் புஷ்பா வழங்கிய தீர்ப்பில், சூரிய பிரகாஷ், தினேஷ், கணேஷ், சந்தோஷ் குமார், சுபாஷ் ஆகியோருக்கு ஆயுள், தலா ரூ.20 ஆயிரம் அபராதம் விதித்துள்ளார். கருப்பையாவுக்கு20ஆண்டு சிறை விதிக்கப்பட்டது. தமிழக அரசு சார்பில், பெண்ணுக்கு ரூ.12.50 லட்சம் நிவாரணம், அரசு பள்ளியில் பணி வழங்கப்பட்டுள்ளதாக அரசு சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர் எஸ்.தமிழ் இனியன் தெரிவித்தார்.

# வங்கி மோசடி வழக்கில் 15 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த குற்றவாளி கைது

சென்னை: கடந்த 2010ம் ஆண்டு சேலம் இந்தியன் வங்கி, வீர பாண்டி கிளையில் சென்னையை சேர்ந்த தனியார் உர தயாரிப்பு நிறுவனத்தின் இயக்குநர்கள் ரூ.2.01 கோடி கடன் பெற்றுள்ளனர்.

ஆனால்அவர்கள் தங்களுக்குசொந்தமில்லாத சொத்து ஆவணங்களை அடமானமாக வைத்து இந்ததொகையை பெற்று மோசடி செய்தது தெரியவந்தது. இதையடுத்து அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் சக்தி



வேல், விஜயகுமாரி, ஆரோக்கிய சாமி மற்றும் வங்கியின் மேலாளர்பாலசுப்பிரமணியன் ஆகியோர் மீது சிபிஐ வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டது.

ஆனால் ஆரோக்கிய சாமி என்பவர் மட் டும் வழக்கு பதிவு செய்ததில் இருந்து தலைமறைவாக இருந்து வந்துள்ளார். மேலும் வங்கியிலும் போலியான முகவரியை கொடுத்துள்ளார். இதையடுத்து அந்த நபரை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து தேடி வந்துள்ளனர்.இதனிடையே நேற்று முன் தினம் தலைமறைவாக இருந்த ஆரோக்கிய சாமியை கைது செய்து நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர்.



உலக சுற்றுச்சூழல் தின விழா நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் சென்னிமலை இரண்டாவது வார்டில் மரக்கன்று நன்று சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னிமலை இரண்டாவது வார்டு கவுன்சிலர் கலைச்செல்வி மற்றும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



நாடு முழுவதும் உலக மிதிவண்டி தினம் அனுசரிக்கப்படுகிறது. இதனை ஒட்டி, ஈரோட்டில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத் அமைச்சர் விஜய்பாலாஜி ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவிலிருந்து அரசு மருத்துவமனை ரவுண்டானா வரை அவரே சுயமாய் சைக்கிள் ஓட்டி வந்து உலக மிதிவண்டி தினத்தைக் கொண்டாடினார். இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் குறையும் கருவுறுதல் விகிதம் விவரிக்கும் மத்திய அரசின் அறிக்கை

புதுடெல்லி: மக்கள் தொகையை நிலையானதாக பராமரிக்கத் தேவையான கருவுறுதல் விகிதம் இந்தியாவில் குறைந்து வருவதாக மத்திய அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

உலக நாடுகளில் மக்கள் தொகையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த 2023-ல் சீனாவைமக்கள் தொகை அடிப்படையில் இந்தியா முந்தியது. கடந்த 1950-களில் இந்திய மக்கள் தொகை 36 கோடியாக இருந்த நிலையில், அந்த எண்ணிக்கை இப்போது 145 கோடியாக உள்ளது. இந்நிலையில், இந்தியாவில் ஒட்டுமொத்த கருவுறுதல் விகிதம் குறைந்துள்ளதாக அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதில் நாட்டின் ஒட்டுமொத்த கருவுறுதல் விகிதம், மக்கள் தொகை மாற்றீட்டுக்கான அளவுகோலாக (Relacement Benchmark) நிர்ணயிக்கப்பட்டுள்ள 2.1-க்கும் கீழே சென்றுள்ளது. அதுதான் இப்போது கருவுறுதல் விகிதம் குறித்து கவனம் பெற செய்துள்ளது.

மாற்றீட்டுக்கான அளவுகோல் என்றால் என்ன? - மக்கள் தொகை எண்ணிக்கை அடுத்த தலைமுறையினருக்கு மாறும்போது, அதை ஈடுசெய்யும் வகையில், ஒரு பெண் பெற்றிருக்க வேண்டிய சராசரி குழந்தைகளின் எண்ணிக்கையை குறிப்பதுதான் மாற்றீட்டுக்கான அளவுகோல்.

அந்த வகையில் ஒட்டுமொத்த கருவுறுதல் விகிதம் அதற்கும் குறைந்து, அது நீண்ட காலத்துக்கு நீடித்தால், மக்கள் தொகை எண்ணிக்கை படிப்படியாக குறையும். ஒருவேளை கருவுறுதல் விகிதம் மாற்றீட்டுக்கான அளவுகோலை கடந்து உயரவில்லை என்றால் மக்கள் தொகை எண்ணிக்கையில் சரிவை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வாளர்கள் சொல்வது என்ன? - இந்திய மக்கள் தொகை எண்ணிக்கை அடுத்த 21 ஆண்டுகளில் அதன் உச்சத்தை எட்டும் என வாஷிங்டன் பல்கலைக்கழத்தின் சுகாதார நிறுவன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர்தான் மக்கள் தொகை எண்ணிக்கை இந்தியாவில் குறையும் என தங்களது அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்திய மக்கள் தொகை எண்ணிக்கை சுமார் நூறு கோடியாக இருக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தற்போதுள்ள எணிக்கையைகாட்டிலும்சுமார் 50 கோடி குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய ரீதியாகவும் இந்தியாவில் கருவுறுதல் விகிதம் மாறுபடுகிறது. நாட்டிலேயே பிஹார் மாநிலத்தில் கருவுறுதல் விகிதம் 2.9 என உள்ளது. தென் மாநிலங்களான தமிழகம், ஆந்திரா, கேரளம் உள்ளிட்ட மாநிலங்களின் கருவுறுதல் விகிதம் 1.3 என உள்ளது. நாட்டிலேயே மிக குறைவாக டெல்லியில் கருவுறுதல் விகிதம் 1.2 என உள்ளது.

ஒரு குழந்தை போதும் என எண்ணும் பெற்றோர்கள், கலாச்சார மாற்றம், நகர வாழ்க்கை உள்ளிட்ட குடும்ப வாழ்க்கையும் இதற்கான காரணங்களாக தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் கருவுறுதல் விகிதம் குறைவது குறித்து எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க் கருத்து தெரிவித்துள்ளார். அதில் படித்தவர்கள் மத்தியில் இந்தியாவின் பிறப்பு விகிதம் பல ஆண்டுகளுக்கு முன்பே மாற்றீட்டுக்கான அளவுகோலுக்கு கீழே குறைந்துவிட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கீழ வீராணம் ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் கீழ வீராணம் கிராம ஊராட்சி வளாகத்தில் வைத்து உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர், வீரபாண்டியன் தலைமையில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது

அதனையெடுத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



நிகழ்வில் துணைத்தலைவர் ஜமீலபீவி, முஸ்லீம் பள்ளி தாளாளர் சிந்தா மதார், நீர் பாசனமிட்டி தலைவர் முத்துப்பாண்டி, பற்றாளர், மற்றும் ஊராட்சி செயலர் பாண்டியராஜ், வார்டு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, அனிபா, கிராம உதவியாளர், உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.







சேலம் மாவட்டம் ஏற்காடு ஒன்றியம் செம்மநத்தம் ஊராட்சிக்கு உட்பட்ட பெரியக்காடு கிராமம் செல்லும் சாலையில் உள்ள மூன்று செக்டேம்கள் அனைத்தும் பழுதடைந்து சேரும் சகதியுமாகவும் புதர்கள் போல் காணப்படுகிறது சாலையும் பழுதடைந்து வாகன ஓட்டிகளுக்கும் பள்ளி குழந்தைகள் மாணவ, மாணவியர்கள் , பெண்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான சாலையாக உள்ளதால் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது வரும் மாதங்களில் மழைக்காலமாக இருப்பதால் மிகவும் சாலைகள் பழுது அடைய வாய்ப்பு உள்ளது மற்றும் மழை பெய்யும் காலங்களில் மழை நீரை சேகரித்து வைத்தாலே கோடைகாலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு குறைய வாய்ப்புள்ளது அதனால் எங்கள் கோரிக்கையை ஏற்று அதனை சுத்தம் செய்து தூர்வாரி அணையை முறையாக கட்டிக் கொடுக்குமாறு ஊர் மக்கள் கேட்டு கொண்டனர்

# ரத்தினபுரி அருள்மிகு ஸ்ரீ ஜலக்கண் மாரியம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது

## திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசம் செய்தனர்

கோவை ரத்தினபுரி அருள்மிகு ஸ்ரீ ஜலக்கண் மாரியம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா



வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதில் சுற்றுப்பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

கோவை ரத்தினபுரி இரண்டாவது கிராஸ் சம்பத் வீதி பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ ஜலக்கண் மாரியம்மன் திருக்கோவில். இக்கோவில் தற்போது புனரமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேக நன்னீராட்டு பெருவிழா நான்கு கால யாக பூஜையுடன் விமர்சையாக நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மங்கல இசையுடன் தொடங்கிய இந்நிகழ்வில் விநாயகர் வழிபாடு, மகா கணபதி ஹோமம், அஷ்டலட்சுமி ஹோமம், மகா சுதர்சன ஹோமம்,நவகிரகசாந்தி ஹோமம் உள்ளிட்ட ஹோமங்களுடன் முதல் கால வேள்வி பூஜைகள் நிறைவடைந்தன. தொடர்ந்து முளைப்பாரிகை மேளதாளத்துடன் திருவீதி உலா வந்து ஆலயத்தில் சேர்ந்தன.

சனிக்கிழமை விமான கலசம் பிரதிஷ்டை செய்து யாக குண்டத்தில் ஹோம பொருட்கள் இட்டு இரண்டாம் கால வேள்வி பூஜை நடைபெற்றது. மாலை சிறப்பு வள்ளி கும்மி அடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதையடுத்து இன்று மூன்றாம் கால வேள்வி யாகம் மற்றும் நான்காம் கால வேள்வி யாகம் நிறைவு பெற்று நலம் தரும் ஜலக்கண் அம்பிகைக்கு விமான கும்பாபிஷேகம் ஸ்ரீ அம்மன் பரிவார சன்னதி மும்மூர்த்திகளுக்கு சமகால மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.தொடர்ந்து மகா அபிஷேகம் சிறப்பு அலங்கார தரிசனம் நடைபெற்று பக்தர்களுக்கு கும்பாபிஷேக பிரசாதம் வழங்கினர். இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து சிலர் திரளான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த கும்பாபிஷேக யாக பூஜைகளை கோவையைச் சேர்ந்த அந்தமான் பூஜை புகழ் ஸ்ரீ உ வே வெங்கடேச அய்யங்கார் குழுவினர் செய்திருந்தனர். கும்பாபிஷேகத்தை கோவைப்புதூர் சித்தர் பீடம் குரு ஸ்ரீ சித்தர் சக்திநாதர் சிவ ஸ்ரீ சிவ ஜோதி சித்தர் நடத்தி வைத்து அருளாசிவழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வி சம்பத்குமார், ஸ்ரீதேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சிவா, பி ஜே எம் எம் மாநிலத் துணைத் தலைவர்புவனேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளை அருள்மிகு ஸ்ரீ ஜலக்கண் மாரியம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு கதிரவன், கார்த்திக் பாபு, பாபு ராமசாமி, தலைமை குழு ஸ்ரீராம், ரமணன், கார்த்திக், மணிகண்டன், கிருஷ்ணா, நிர்வாக குழு ஆர்விகன்சல்டிங்சுரேஷ், அபிஷேக் கன்சல்டிங் தனபால், அஜித் கண்ணன், விழா குழு கோவிந்தராஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# ஈரோட்டில் கலைஞர் பிறந்தநாள் விழா: 1000 மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் முத்துசாமி வழங்கினார்

ஈரோடுதெற்குமாவட்ட தி.மு.க சார்பில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு, கருங்கல்பாளையம் பகுதியில் பிரம்மாண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கருங்கல்பாளையம் திமுக பிரமுகர் கேபிள் செந்தில்குமார் தலைமை தாங்கினார். 39-வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.



சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான சு.முத்துசாமி அவர்கள், ஏழை எளிய மக்கள் மற்றும் மாணவ-மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்பித்தார்.


பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 450-க்கும் அதிக மதிப்பெண்கள் பெற்ற 15 மாணவர்களுக்கும், பிளஸ்-2 பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் குவித்த 8 மாணவர்களுக்கும் தலா 2,000 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாகப் பெற்றோரை இழந்த மாணவ-மாணவிகளுக்கும் பிரத்யேக நிதி உதவி வழங்கப்பட்டது.

கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில், அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 1000 பள்ளி மாணவ-மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகரச் செயலாளர் சுப்பிரமணியம், மாவட்டப் பொருளாளர் பி.கே.பழனிசாமி, கழகப் பொதுக்குழு உறுப்பினர் திண்டல் குமாரசாமி, பகுதிச் செயலாளர்கள் அக்னி சந்துரு, குறிஞ்சி தண்டபாணி, வார்டு செயலாளர் கே.டி. மகேஸ்வரன்,மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர் குணசேகரன் மற்றும் கழக முக்கிய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியா?: 11ந் தேதி முக்கிய அறிவிப்பு ராகவா லாரன்ஸ் பரபரப்பு பதிவு



திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட உள்ளதாக பரவி வரும் தகவல்களுக்கு நடிகரும் நடன இயக்குநருமான ராகவா லாரன்ஸ் விளக்கம் அளித்துள்ளார்.

திருச்சி கிழக்கு தொகுதியில் ராகவா லாரன்ஸ் போட்டியிட உள்ளதாக பல்வேறு ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன்"

"திருச்சி கிழக்கு தொகுதி தேர்தலில் நான் போட்டியிடப் போவதாக பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.இதுகுறித்து பலரும்என்னைதொடர்புகொண்டு விளக்கம் கேட்கிறார்கள். இந்த வதந்திகளும் ஊகங்களும் ஒரு குறிப்பிட்ட எல்லையை தாண்டிவிட்டதால், அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்" என்று குறிப்பிட்டு ள்ளார்.

'பென்ஸ்' படப்பிடிப்பில் பிஸி

தற்போதுதாம்'பென்ஸ்' திரைப்படத்தின் படப்பிடிப்பில் முழுமையாக ஈடுபட்டு இருப்பதாகவும், அந்தப் படத்தின் படப்பிடிப்புவரும்10-ம்தேதியுடன் நிறைவடைய உள்ளதாகவும் ராகவா லாரன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜூன் 11-ம் தேதி முக்கிய அறிவிப்பு

மேலும்,தனது வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவு தொடர்பான அதிகாரப்பூர்வஅறிவிப்புவரும்11-ம் தேதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வெளியாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

"எனது தாயாரின் ஆசியுடன்,எனது வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவு குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஜூன் 11-ம் தேதி காலை 9.30 மணிக்கு வெளியாகும்" என்று பதிவிட்டுள்ளார்.

ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு

ராகவா லாரன்ஸின் இந்த அறிவிப்பு அரசியல் தொடர்பானதா அல்லது திரைப்படம் மற்றும் சமூக சேவை சார்ந்ததா என்பது குறித்து ரசிகர்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ளன. எனினும், அதற்கான தெளிவான பதில் ஜூன் 11-ம் தேதி வெளியாகும் அவரது அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டசபை தேர்தலில்பெரம்பூர்மற்றும் திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிட்ட முதல்-அமைச்சர் ஜோசப் விஜய், 2 தொகுதியிலும் வெற்றி பெற்றார். ஆனால், 2 தொகுதிகளிலும் எம்.எல்.ஏ.வாக அவர் தொடர முடியாது என்பதால், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். அவருடைய ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட தேர்தல் ஆணையம், திருச்சி கிழக்கு தொகுதியை காலியானதாக அறிவித்தது.

பொதுவாக, ஒரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால், அடுத்த 6 மாதத்திற்குள் சட்டசபை தேர்தல் நடத்தியாக வேண்டும். அந்த வகையில், நவம்பர் மாதத்திற்குள் திருச்சி கிழக்கு தொகுதிக்கு தேர்தல் நடத்தியாக வேண்டும்.

இதற்கிடையில், த.வெ.க. தரப்பில் ஓய்வு பெற்றஐ.ஏ.எஸ்.அதிகாரி சகாயம் அல்லது நடிகர் ராகவா லாரன்ஸ் போட்டியிடலாம் என்று சமூக வலைதளங்களில் தகவல் பரவி வந்தது குறிப்பிடத்தக்கது.

# இனி கோவில்களில் நெடுநேரம் காத்திருக்க வேண்டாம்: இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் அதிரடி திட்டம்



திருவண்ணாமலைக்கு ஆந்திராவில் இருந்து வரும் பக்தர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அவர்களிடம் பணம் பறிக்கும் முயற்சியில் சில கும்பல் ஈடுபடுவதாகஇந்துசமய அறநிலையத்துறையின் கவனத்திற்கு சென்றது. இந்நிலையில், ஆந்திராவில் இருந்து வந்த பக்தர்களிடம் சிறப்பு தரிசனம் மூலம் விரைவாக சாமி பார்க்க அழைத்துச் செல்வதாக கூறி மர்ம நபர் மோசடியில் ஈடுபட முயற்சித்துள்ளார்.

கோவில் நிர்வாகத்தினர் இதை கண்டறிந்து விசாரித்த போது அந்த நபர் கண்ணிமைக்கும் நேரத்தில் தப்பியோடினார். சிசிடிவி காட்சிகளை கொண்டு அந்த நபர் மீது காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கோவில்களில் ஆன்லைன் முன்பதிவு டிக்கெட் முறையை கட்டாயமாக்க அறநிலையத்துறை திட்டமிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கூட்ட நெரிசல், விரைவு தரிசன மோசடி உள்ளிட்டவற்றை தவிர்க்க முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே அனுமதி என்ற திட்டத்தை அமல்படுத்த அறநிலையத்துறைதிட்டமிட்டுள்ளது.

பண்டிகை நாட்கள், மற்றும் முக்கியமான விஷேஷ நாட்களிலும் இந்த நடைமுறை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓரிரு மாதங்களில் இந்த நடைமுறையை அமலுக்கு கொண்டு வர அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பக்தர்கள் இனி கோவில்களில் நெடுநேரம் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படாது.

# ஏவுகணைகளின் உற்பத்தியை 2.5 மடங்கு அதிகரிக்கும் வடகொரியா



சர்வதேச தடைகளை தாண்டி, வடகொரியா தனது அணு ஆயுத உற்பத்தியை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, அணு ஆயுதத்திற்கான எரிபொருள் மற்றும் பிற பொருட்களை உற்பத்தி செய்வதற்கான புதிய ஆலையை அந்நாட்டு அரசு சமீபத்தில் திறந்தது.

ஏவுகணை உற்பத்தி

இந்தநிலையில், வடகொரியாவில் ஏவுகணைகளின் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளில், 2.5 மடங்கு அதிகரிக்க அந்நாட்டு அதிபர் கிம் ஜாங் உன் உத்தரவிட்டுளார்.

ராணுவ தளவாட உற்பத்தி நிலவரங்களை கிம் ஜாங் உன் நேரில் ஆய்வு செய்த போது, அந்நாட்டின் சக்திவாய்ந்த HWA-SONG-11 ரக ஏவுகணை உற்பத்திப்பிரிவின் படங்கள் வெளிப்படையாக காண்பிக்கப்பட்டது சர்வதேச அளவில் உற்றுநோக்கப்படுகின்றன.

மத்திய கிழக்கில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே போர் நீடித்து வரும் சூழலில் வடகொரியாவின் இந்த நடவடிக்கை கவனம் பெற்றுள்ளது.

ஐந்து ஆண்டுகளில் மட்டும் வடகொரியாவின் அணுசக்திப் பொருட்கள் உற்பத்தித் திறன் இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நடப்பது தவெகவின் ஆட்சியா? இல்லை திமுகவின் ஆட்சியா? இதுதான் மாற்று அரசியலா? சீமான் கேள்வி



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையைச் சேர்ந்த செய்தியாளரும், நாம் தமிழர் கட்சியின் மாவட்டத் தகவல் தொழில்நுட்பப் பாசறைச் செயலாளருமான அன்புத்தம்பி ஹாஜா முகைதீன் தனது வீட்டின் வாசலிலேயே போதைக் கும்பலால் கொடூரமாகத் தாக்கப்பட்ட செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தேன். தம்பிக்கு என்னுடைய ஆறுதலைத் தெரிவித்து, முழு உடல்நலம் பெற்று மீண்டுவர துணை நிற்கிறேன்.

போதைப் பொருட்களின் விற்பனைக்கு எதிராக நிற்கும் ஒரு ஊடகவியலாளருக்கே இவ்வளவு பெரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, வன்முறைத்தாக்குதல் தொடுக்கப்படுகிறதென்றால், எளிய மக்களின் நிலை என்னவாக இருக்கும்? நாள்தோறும் போதைக் கும்பலின் அட்டூழியமும், பெண்களுக்கு எதிரான தாக்குதல்களும், வன்முறை வெறியாட்டங்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. திமுகவின் ஆட்சியில் நிகழ்ந்த கொடுமைகள்தான் தொடருமென்றால், நடப்பது தவெகவின் ஆட்சியா? இல்லை! திமுகவின் ஆட்சியா? இதுதான் மாற்று அரசியலா? முதல்வராகப் பதவியேற்றதும், 'போதைப்பொருள்தடுப்புக்கானசிறப்புஅதிரடிப்படை அமைப்பு எனக் கையெழுத்திட்டாரே விஜய், என்ன செய்கிறது அந்தப் படை? இக்கொடூரத் தாக்குதல் நடத்தியவர்களை தமிழ்நாடு அரசு உடனடியாக கைது செய்து, கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் இருந்து 1,076 இந்தியர்கள் வெளியேற்றம்



புதுடெல்லி:

நடப்பாண்டில் அமெரிக்காவில் இருந்து 1,076 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்றார். அவர் பொறுப்பேற்ற பிறகு அமெரிக்காவில் சட்டவிரோத மாக தங்கியிருக்கும் வெளிநாட்டினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்த சூழலில் மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் டெல்லியில் நேற்று முன் தினம் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த 2025-ம் ஆண்டில் அமெரிக்காவில் இருந்து 3,567 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டனர். நடப்பாண்டில் இதுவரை அமெரிக்காவில் இருந்து 1,076 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். சட்டப்பூர்வ மாக அமெரிக்காவில் குடியேறியவர்கள் மீது எவ்விதநடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் சட்டவிரோத மாக தங்கி லாரி ஓட்டுநர்களாக பணியாற்றிய 30 இந்தியர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டனர். முன்னாள் அதிபர்பைடன்ஆட்சிக் காலத்தில் அவர்கள் பணி விசா பெற்றனர்.

அவை காலாவதியாகிவிட்டன. எனவே அவர்கள் விரைவில் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றுஅமெரிக்கஅரசு தெரிவித்து உள்ளது.

# வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.29 உயர்வு; வணிக சிலிண்டர் விலையும் ஏற்றம்



சென்னை: நாடு முழுவதும் 14.2 கிலோ எடை கொண்ட வீட்டுஉபயோக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.29 என உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றம் இன்று முதல் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போல வணிகள் சிலிண்டர் விலையும் உயர்ந்துள்ளது.

மேற்காசிய போர் காரணமாக உலக நாடுகளுக்கு தேவையான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பெட்ரோல், டீசல், எல்பிஜி எரிவாயு உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்துள்ளது. இவை நேரடி தாக்கம் என்றால் பல்வேறு பொருட்களின் விலை உயர்வினால் உலக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சூழலில் சிலிண்டர்விலைஉயர்ந்துள்ளது. இதனை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அதன்படி வீட்டு உபயோகத்துக்கான 14.2 கிலோ எடையுள்ள மானியம் இல்லாத சிலிண்டரின் விலை சிலிண்டருக்கு ரூ.29 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ரூ.928.50-க்கு விற்பனை செய்யப்பட்ட வீட்டு உபயோக சிலிண்டரின் விலை இன்று முதல்ரூ.957.50-க்குவிற்பனை செய்யப்படும். கடைசியாக கடந்த மார்ச் மாதம் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.60 என உயர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோல வர்த்தக சிலிண்டரின் விலை ரூ.46 உயர்ந்துள்ளது.

சென்னையில்19கிலோ எடை கொண்ட வர்த்தக சிலிண்டர் ரூ.3,283 என தற்போது விற்பனை ஆகிறது. கடந்த மே மாதம் ரூ.990.50, ஏப்ரல் மாதம் ரூ.203, மார்ச் மாதம் ரூ.144 என வர்த்தக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் தேசிய அளவில் சிலிண்டர் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனால் மக்கள் தங்களுக்கு தேவையான எல்பிஜி எரிவாயுசிலிண்டர்களை பெற முடியாமல் தவித்தனர். இந்த சூழலில் அந்த நிலைமை படிப்படியாக சீரானது. இப்போது சிலிண்டர் விலை உயர்வு மக்களை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள் விலையும் ஏற்கெனவே ஏற்றம் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# Kolkata couple held for DU professor's murder in Delhi, property row motive: Police



A couple from Kolkata in West Bengal was arrested on Sunday in connection with the murder of a 45-year-old assistant professor of a Delhi University college, whose body was found at a high-rise society in east Delhi's Vasundhara Enclave on Thursday.

Joint commissioner of police (eastern range) Ajit Kumar Singla said that the motive behind the murder was a property dispute and that the couple, who travelled to Delhi, murdered the professor and returned to Kolkata, are distant relatives of the deceased.

The woman, who was appointed a permanent assistant professor at her current college in Raja Garden in 2023, was found with severe head injury, both her wrists slit and she had bruises on her face and body, suggesting that a scuffle had taken place, according to investigators familiar with the probe details.

A senior police officer said the elder sister lives with her family in Mayur Vihar and was the first to reach the scene. When she found the door locked, she informed the locals, who then alerted the society's residents welfare association (RWA), the officer added. The lock was broken in the presence of RWA members.

The arrested couple were living as tenants in one of her ancestral properties in Kolkata, deputy commissioner of police (east) Rajiv Kumar said.

"The couple wanted to buy the house they had been living in for many years.

The professor's parents and two siblings were reportedly ready to sell it, as all the family members were settled in Delhi and had no plans of going back to Kolkata. However, the professor was against the family's decision to sell the ancestral property," Kumar said.

"The couple saw her as the main hurdle. Enraged because the professor was not giving her consent despite their repeated requests, they travelled to Delhi, killed her on Wednesday, and returned to Kolkata," Kumar added.

Police said that the couple was arrested in Kolkata and is being brought to Delhi for further interrogation and investigation.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.